//தனிக்கவனம்// //மிக மிக அவசரம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1684–2 /ஆ2/2023 . நாள் : 25.04.2023.

பொருள்: பள்ளிக்கல்வி – அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 31.05.2023 –ன் நிலவரப்படி இடைநிலை, கலை, இசை மற்றும் தையல் ஆசிரியர்களின் பணியிட விவரங்கள் அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை: சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.054550/சி3/ /இ1/2022, நாள். 25.04.,2023.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்திற்கிணங்க வேலூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 31.05.2023 –ன் நிலவரப்படி நிரப்பத் தகுந்த இடைநிலை ஆசிரியர்கள், கலை ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள், மற்றும் தையல் ஆசிரியர்கள் பணியிட விவரங்களை இத்துடன் இணைக்ககப்பட்டுள்ள உரிய படிவத்தில் கோரப்பட்டுள்ளபடி மட்டும் Excel Sheet–ல் பூர்த்தி செய்து இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு. கையொப்பமிடப்பட்ட இரண்டு பிரதிகள் இவ்வலுவலக ஆ2 இருக்கை பிரிவில் 26.04.2023 நண்பகல் 12 மணிக்குள் நேரில் சமர்ப்பிக்குமாறு அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.(பணியிடம் இல்லாத பள்ளிகளில் இன்மை அறிக்கை கண்டிப்பாக அளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது)

மேலும் இது சார்ந்த தகவல்கள் பள்ளிக் கல்வி ஆணையரகத்திற்கு தொகுப்பறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால், இதில் காலதாமதத்தை தவிர்த்திடுமாறும், காலதாமதம் ஏற்படுமாயின் அதற்கான முழுபொறுப்பு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களையே சாரும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது என அனைத்து வகை அரசு / நகராட்சி / மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மீளவும் தெரிவிக்கப்படுகிறது.

//(ஒம்)க. முனுசாமி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு– உரிய படிவம்
(Excel Sheet–ல் மட்டும்)

பெறுநர்
அனைத்து வகை அரசு / நகராட்சி / மாதிரி –
உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வே.மா.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்,(இடைநிலை) மற்றும் (தொடக்கக்கல்வி)
வேலூர் – 09. (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும்)

//ப.த.//

| வ. எண் | Udise Code | பள்ளியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | | | | பணிபுரிவோர் எண்ணிக்கை | | | | காலிப்பணியிட எண்ணிக்கை 31.05.2023 அன்றைய நிலவரப்படி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இடைநிலை ஆசிரியர் | கலை ஆசிரியர் | இசை ஆசிரியர் | தையல ஆசிரியர் | இடைநிலை ஆசிரியர் | கலை ஆசிரியர் | இசை ஆசிரியர் | தையல ஆசிரியர் | இடைநிலை ஆசிரியர் | கலை ஆசிரியர் | இசை ஆசிரியர் | தையல ஆசிரியர் |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |